بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/07/2023 அன்று U.K - பைத்துல் ஃபு(த்)தூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பத்ர் யுத்தத்தின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய எடுத்துரைப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۱﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿۲﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿۳﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿۵﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿۷﴾

பத்ர் யுத்தம் முடிந்த பிறகு, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிறைபிடிக்கப்பட்டவர்களோடு நல்ல முறையில் நடந்து கொண்டது பற்றி தபக்காத் இப்னு சஃது என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

பத்ரில் சிறைபிடிக்கப்பட்டவர்கள் வந்த போது, அவர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சச்சா ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்று இரவு விழித்துக் கொண்டிருந்தார்கள். சஹாபாவில் ஒருவர், 'அல்லாஹ்வின் நபி அவர்களே! எந்த விஷயம் தங்களை விழித்திருக்க வைத்துள்ளது?' என்று கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அப்பாஸின் முனகல் சத்தம்' என்று கூறினார்கள். எனவே, ஒருவர் சென்று ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களின் கட்டைத் தளர்த்தி விட்டார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'எனக்கு அப்பாஸின் முனகல் சத்தம் கேட்கவில்லையே என்ன விஷயம்?' என்று கேட்டார்கள். அப்போது ஒருவர், 'நான் அவர்களின் கட்டை சற்று லேசாக்கி விட்டேன்' என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அப்படியானால், சிறைபிடிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் இப்படியே செய்யுங்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன்னபிய்யீன் நூலில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு, 'சிறைபிடிக்கப் பட்டவர்களுடன் மென்மையுடனும் பரிவுடனும் நடந்து கொள்ளுங்கள்; அவர்களின் நிம்மதியைக் கருத்தில் கொள்ளுங்கள்' என்று வலியுறுத்திக் கூறினார்கள். தம் எஜமானரின் ஒவ்வோர் ஆசையையும் நிறைவேற்ற வேண்டும் எனும் பேரன்பு கொண்டிருந்த சஹாபா, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இந்த அறிவுரைப்படி எந்த அளவுக்கு அழகான முறையில் செயல்பட்டார்கள் என்றால், உலக வரலாற்றில் இதற்கு நிகர் கிடைப்பதில்லை.

சர்வில்லியம் முயர் சிறைபிடிக்கப்பட்டவர்களுடன் இந்த பரிவான அணுகுமுறை பற்றி கீழ்வரும் சொற்களில் ஒப்புதல் அளித்துள்ளார்:

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு இணங்க அன்ஸாரிகளும் முஹாஜிர்களும் காஃபிர் கைதிகளுடன் மிகவும் அன்போடும் பரிவோடும் நடந்து கொண்டார்கள். சில கைதிகளின் சுய சான்று வரலாற்றில் இந்தச் சொற்களில் கூறப்பட்டுள்ளது. இறைவன் மதீனா வாழ் மக்களுக்கு நன்மை செய்யட்டுமாக! அவர்கள் எங்களைப் பயண விலங்குகள் மீது அமர்த்தி விட்டு, தாம் நடந்து செல்வார்கள். சமைத்த கோதுமை ரொட்டிகளை எங்களுக்குத் தந்து விட்டு, தாம் வெறும் பேரீத்தம் பழங்களை சாப்பிட்டுக் கொண்டு இருந்து விடுவார்கள்.

முயர் சாஹிப் எழுதுகிறார்: இந்த நல்ல முறையில் நடந்து கொண்டதன் தாக்கத்தினால் சிறைபிடிக்கப்பட்டவர்களில் சிலர் முஸ்லிம்கள் ஆகி விட்டார்கள் என்பதை அறிந்து நாம் வியப்படையக் கூடாது. இப்படிப்பட்ட மக்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். சிறைபிடிக்கப்பட்டவர்களில் இஸ்லாத்தை ஏற்காதவர்கள் மீதும் இந்த நல்ல முறையில் நடந்து கொண்டதன் மிக நல்ல தாக்கம் இருந்தது.

பத்ர் யுத்தம், அதன் தாக்கங்கள் ஆகியவைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

பத்ர் வெற்றியின் நற்செய்தியை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களும் மதீனா வந்தடைந்தார்கள். அப்போது அவர்களின் நாவிலிருந்து வெற்றியின் நற்செய்தி பற்றிய அறிவிப்பைக் கேட்டு, அல்லாஹ்வின் எதிரியான யூதன் கஅப் பின் அஷ்ரஃப் அவர்களைப் பொய்ப்பிக்க ஆரம்பித்தான். மேலும், அவன் இவ்வாறு கூறினான்: ஒருவேளை முஹம்மத் [(ஸல்) அவர்கள்] இந்தப் பெரும்பெரும் தலைவர்களைக் கொன்று விட்டார் என்றால், பூமிக்குமேல் இருப்பதை விட பூமிக்குக் கீழ் இருப்பது (அதாவது, உயிரோடு இருப்பதை விட மரணிப்பது) சிறந்ததாகும்.

மவ்லானா ஷிப்லீ நுஃமானீ பத்ர் யுத்தத்தின் விளைவுகளைப் பற்றி எடுத்துரைத்தவாறு தமது நூலில் இவ்வாறு எழுதுகிறார்கள்: பத்ர் யுத்தம் மார்க்க மற்றும் நாட்டின் நிலைமைகளில் பல்வேறு வகையான தாக்கங்களை ஏற்படுத்தியது. உண்மையில், இது இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்கான முதல் அடியாக இருந்தது. குறைஷிகளின் பெரும்பெரும் தலைவர்கள் - அவர்களில் ஒவ்வொருவரும் இஸ்லாத்தின் முன்னேற்றத்தின் பாதையில் இரும்பு வேலியாக இருந்தார்கள் - அவர்கள் அனைவரும் அழிந்து விட்டார்கள்.

உத்பா மற்றும் அபூ ஜஹ்ல் -ன் மரணமானது குறைஷிகளின் பொது ஆளுமையின் மகுடத்தை அபூ ஸுஃப்யானின் தலையில் வைத்தது. அதன் மூலம் உமையாப் பேரரசு ஆரம்பமானது. ஆனால், குறைஷிகளின் உண்மையான ஆற்றலின், வலிமையின் தரம் குறைந்து விட்டது.

அதுவரை மதீனாவில் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் பகிரங்கமான காஃபிராக இருந்தான். ஆனால், இப்போது அவன் வெளிப்படையாக இஸ்லாத்தின் வட்டத்திற்குள் வந்து விட்டான். ஆனாலும், வாழ்நாள் முழுவதும் நயவஞ்சகனாக இருந்தான். அந்த நிலையிலேயே உயிரை விட்டான்.

இந்த பகிரங்கமான வெற்றி நிராகரிப்பாளர்களின் பொறாமைத்தீயை அதிகரிக்கச் செய்து விட்டது. அவர்களால் அதை வரையறையில் வைக்க முடியவில்லை. குறைஷிகள் முதலில் கஸ்ரமீக்காக அழுதார்கள். பத்ர் யுத்தத்திற்குப் பிறகு, ஒவ்வொரு வீடும் இழவு வீடாக இருந்தது. பத்ரில் கொல்லப்பட்டவர்களுக்காகப் பழிதீர்ப்பதற்காக மக்காவின் பிள்ளைகள் உட்பட அமைதியின்றி தவித்தார்கள். ஆக, ஸவீக் (தாக்குதல்) நிகழ்வும் உஹது போரும் இந்த உத்வேகத்தின் வெளிப்பாடே ஆகும்.

ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: பத்ர் யுத்தத்தின் தாக்கம் காஃபிர்கள், முஸ்லிம்கள் என இரு சாராருக்கும் மிகவும் ஆழமானதாக, நீண்ட காலம் இருக்கக்கூடியதாக இருந்தது. எனவே, இஸ்லாமிய வரலாற்றில் இந்தப் போருக்கு ஒரு சிறப்பு முக்கியத்துவம் உள்ளது. எதுவரை என்றால், திருக்குர்ஆனில் இந்தப் போருக்கு 'யவ்முல் ஃபுர்கான்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. அதாவது, இஸ்லாம் மற்றும் நிராகரிப்புக்கு இடையில் ஒரு பகிரங்கமான தீர்ப்பு வழங்கப்பட்ட நாள்.

பத்ர் யுத்தத்திற்குப் பிறகும் குறைஷிகளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில், மிகக் கடுமையான போர்களும் நடந்தனதான்; முஸ்லிம்களுக்கு சில இக்கட்டான சூழ்நிலைகளும் ஏற்பட்டனதான்; ஆனால், பத்ர் யுத்தத்தில் மக்கத்து காஃபிர்களின் முதுகெலும்பு முறிந்து விட்டிருந்தது. அதை பிற்காலத்தின் எந்த அறுவை சிகிச்சையாலும் நிரந்தரமாக சரி செய்ய முடியவில்லை. கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைப் பொருத்தவரை இது ஒரு பெரிய தோல்வியாக இருக்கவில்லைதான்.

குறைஷிகள் போன்ற ஒரு சமுதாயத்தில் சிறந்த எழுபது போர்வீரர்கள் கொல்லப்படுவது என்பது ஒருபோதும் சமுதாய அழிவு என்று அழைக்கப்பட முடியாது. பிறகு, ஏன் பத்ர் யுத்தம் 'யவ்முல் ஃபுர்கான்' என்று அழைக்கப்பட்டது? இந்தக் கேள்விக்குப் பதிலாக, திருக்குர்ஆன் கூறிய அந்தச் சொற்களே சிறந்த சொற்கள் ஆகும். அவை இவையாகும்:

وَيَقْطَعَ دَابِرَ الْكٰفِرِيْنَ

பொருள்: நிச்சயமாக அந்த நாளில் காஃபிர்களின் வேர் அறுந்து விட்டது.

அதாவது, பத்ர் யுத்தத்தின் வாள் வீச்சு காஃபிர்களின் வேர் மீது பட்டது. அது இரண்டு துண்டாக ஆகி விட்டது. உண்மையில் பத்ர் யுத்தத்தில் காஃபிர்களின் வேர் அறுந்து விட்டது.

உத்பா, ஷைபா, உமையா பின் கல்ஃப், அபூ ஜஹ்ல், உக்பா பின் அபீ முஈத் மற்றும் நஸ்ர் பின் ஹாரிஸ் போன்றோர் குறைஷிகளின் சமுதாய வாழ்வின் உயிரோட்டமாக திகழ்ந்து வந்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

இதற்குப் பிறகும் முஸ்லிம்கள் மீது அநீதிகள் இழைக்கப்பட்டன; அவர்கள் காஃபிர்களோடு போர்கள் செய்ய வேண்டி வந்தது என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால், பத்ர் யுத்தம் காஃபிர்களின் ஆற்றலை முற்றிலும் உடைத்து விட்டது என்பதிலும் எந்த ஐயமும் இல்லை. முஸ்லிம்களின் கம்பீரம் அவர்கள் மீது வெளிப்பட்டு விட்டிருந்தது. திருக்குர்ஆன் 'யவ்முல் ஃபுர்கான்' என்று கூறியுள்ள பத்ர் யுத்தம் பற்றி பைபிலிலும் ஒரு முன்னறிவிப்பு காணப்படுகிறது.

இவ்வாறே, திருக்குர்ஆன் ஒரு பதினோறாவது இரவைப் பற்றி தெரிவித்து இவ்வாறு முன்னறிவிப்பு செய்திருந்தது: ஹிஜ்ரத்துக்கு சரியாக ஓராண்டுக்குப் பிறகு, காஃபிர்களின் முழு ஆற்றலும் உடைந்து விடும். மேலும், முஸ்லிம்களுக்கு வெற்றி வாகையின் விடியல் வெளிப்பட்டு விடும். ஆக, சரியாக ஓராண்டுக்குப் பிறகு, பத்ர் யுத்தம் நடைபெற்றது. அதில் காஃபிர்களின் பெரும் பெரும் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள். முஸ்லிம்களுக்கு அவர்கள் மீது பகிரங்கமான வெற்றி கிடைத்தது.

பத்ரில் கலந்து கொண்ட சஹாபாவின் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் இந்த விஷயத்தின் மூலமாகவும் கணிக்கலாம். அதாவது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இந்த சமுதாயத்தில் வரவிருக்கும் மஹ்தியின் ஓர் அடையாளமாக இதைக் கூறியுள்ளார்கள்: இவரிடமும் ஒரு நூல் இருக்கும். அதில் இவரிடம் பத்ர் சஹாபாவின் எண்ணிக்கைக்கு ஏற்ப 313 தோழர்களின் பெயர்கள் இருக்கும்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: வாக்களிக்கப்பட்ட மஹ்தியிடம் அச்சிடப்பட்ட ஒரு நூல் இருக்கும்; அதில் அவருடைய 313 தோழர்களின் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் என்பது சஹீஹான ஹதீஸில் வந்து விட்டது. எனவே, அந்த முன்னறிவிப்பு இன்று நிறைவேறி விட்டது என்பதை எடுத்துரைக்க வேண்டியது அவசியமாகும். கருணை புரியப்பட்ட இந்த சமுதாயத்தில் இதற்கு முன், மஹ்தி என்று வாதமும் புரிந்து, அவருடைய காலத்தில் அச்சகமும் இருந்து, 313 பெயர்களும் எழுதப்பட்டுள்ள ஒரு நூலும் அவரிடம் இருந்த எந்த நபரும் பிறக்கவில்லை என்பது வெளிப்படையான விஷயமாகும். இந்த வேலை மனிதனின் கட்டுப்பாட்டில் இருந்திருந்தால், இதற்குமுன் பல பொய்யர்கள் தன்னை இதற்குப் பொருந்தக் கூடியவர்களாக ஆக்கியிருந்திருக்க முடியும் என்பது வெளிப்படையான விஷயம்.

ஷேக் அலீ ஹம்ஸா பின் அலீ மலிக்குத் தூஸீ அவர்கள் தமது நூல் 'ஜவாஹிருல் அஸ்ரார்' இல் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்: 'கத்ஆ' எனும் பெயருடைய ஒரு கிராமத்தில் இருந்து மஹ்தி தோன்றுவார். பிறகு, கூறினார்: இறைவன் இந்த மஹ்தியை உண்மைப் படுத்துவான். வெகு தொலைவிலிருந்து அவருடைய தோழர்களை ஒன்று திரட்டுவான். அவர்களின் எண்ணிக்கை பத்ரில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கைக்கு சமமாக இருக்கும். அதாவது, 313 பேர் இருப்பார்கள்.

அவர்களின் இடங்களின் பெயர்களுடனும், பண்புகளுடனும் சேர்த்து அவர்களின் பெயர்கள் அச்சிடப்பட்ட நூலில் பதியப்பட்டிருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இதற்கு முன் ஒருவர் வாக்களிக்கப்பட்ட மஹ்தியாக வாதமும் புரிந்து, அவரிடம் அச்சிடப்பட்ட ஒரு நூலும் இருந்து, அதில் அவருடைய தோழர்களின் பெயர்களும் இருந்ததாக எவருக்கும் நடக்கவில்லை என்பது இப்போது வெளிப்படையான விஷயமாகும். ஆனால், நான் இதற்கு முன்னரும் ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்ற நூலில் 313 பெயர்களை எழுதி விட்டிருக்கிறேன். இப்போது மீண்டும் சான்றை முழுமைபடுத்துவதற்காக 313 பெயர்களை நான் கீழே (ரிஸாலா அஞ்சாமே ஆத்தமில்) எழுதுகிறேன்.

பதினான்காம் நூற்றாண்டு நன்மையையும் பரக்கத்தையும் கொண்டு வரும் என்று பெண்கள் வரை எந்த நூற்றாண்டைப் பற்றி கூறி வந்தார்களோ, இது அதே பதினான்காம் நூற்றாண்டு தான். இறைவனின் கூற்றுகள் நிறைவேறின. பதினான்காம் நூற்றாண்டில் அல்லாஹ்வின் விருப்பத்திற்கேற்ப அஹ்மத் எனும் பெயரின் பிரதிநிதி வெளிப்பட்டார். எவரைக் குறித்து இந்த பத்ர் நிகழ்வில் முன்னறிவிப்பு இருந்ததோ, எவருக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சலாம் கூறினார்களோ அது நானே ஆவேன். ஆனால், அந்தோ! அந்த நாள் வந்ததும் பதினான்காம் நிலவு உதித்ததும், அவர் கடைகட்டுபவர், சுயநலவாதி என்று அழைக்கப்பட்டார். பார்த்தும் பார்க்காதவர்கள் மீது, நேரத்தைக் கண்டும் அடையாளம் காணாதவர்கள் மீது அந்தோ பரிதாபம்!

பதினான்காம் நூற்றாண்டில் இது நடக்கும் என்று சொற்பொழிவு மேடையில் ஏறியேறி அழுதவர்கள் எல்லாம் மரணித்து விட்டார்கள். இப்போது சொற்பொழிவு மேடையில் ஏறி, வந்திருப்பவர் பொய்யர் ஆவார் என்று கூறுபவர்கள் எஞ்சியிருக்கிறார்கள். இவர்களுக்கு என்ன ஆகி விட்டது? இவர்கள் ஏன் பார்ப்பதில்லை? ஏன் சிந்திப்பதில்லை?

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஃபிப்ரவரி 17, 1904 ஆம் தேதி, ஹஸ்ரத் காஸீ அப்துல் கரீம் சாஹிப் (ரலி) அவர்களின் டைரியில் எழுதப்பட்டிருந்த, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறங்கிய இறையறிவிப்பான, 'பத்ர் யுத்தத்தின் கதையை மறக்காதீர்கள்' என்பது தொடர்பாக கூறினார்கள்:*

அல்லாஹ் நமக்குக் குறிப்பாக, பத்ர் யுத்தத்தின் முக்கியத்துவம் மற்றும் புரிதலை வழங்குவானாக! நாம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரின் வருகையின் நோக்கத்தைப் புரிபவர்களாக இருப்போமாக! அல்லாஹ் முஸ்லிம் சமுதாயத்தையும் இந்த பத்ர் நிகழ்வின் உண்மைத்துவத்தைப் புரியச் செய்வானாக! அவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வந்துள்ள வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அடையாளம் காண்பார்களாக! இவ்வாறு முஸ்லிம்கள் தாம் இழந்த அந்த மகத்துவத்தை மீண்டும் பெறுவதற்கான தகுதியுடையவர்களாக ஆவார்களாக!

*குத்பா சானியாவுக்கு முன் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* அருளுக்குரிய அடுத்த ஜுமுஆவிலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத் யூகேவின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகிறது. இன் ஷா அல்லாஹ். இவ்வாண்டு ஏறக்குறைய முன்று நான்கு ஆண்களுக்குப் பிறகு, ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளியில் இருந்தும் பெரும் எண்ணிக்கையில் விருந்தினர்கள் வருவார்கள். இன்னும் சொல்வதாயின், விருந்தினர்களின் வருகை ஆரம்பித்து விட்டது.

அல்லாஹ் பயணம் செய்து வரும் இவர்கள் அனைவரின் பயணங்களிலும் எளிமையை ஏற்படுத்தி விடுவானாக! அனைவரும் இங்கு பாதுகாப்பாக வந்து சேர்வார்களாக! ஜல்சாவின் நோக்கத்திலிருந்து உண்மையான பலனைப் பெறுவார்களாக! இவ்வாறே, யூகேவில் வாழும் அஹ்மதிகளும் உண்மையான ரூஹுடனும், உணர்வுடனும் ஜல்சாவில் கலந்து கொள்வார்களாக! நாம் ஜல்சாவின் நாள்களில் ஆன்மிக உணவுத் தட்டைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற விஷயம் மட்டுமே முன்னிருக்கட்டுமாக!

*மேற்கொண்டு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜல்சாவில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினராகக் கருதி தொண்டாற்றுவது ரீதியாக, ஜல்சாவில் பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்கள், பல்வேறு துறைகள், கலந்து கொள்பவர்கள் மீது வரும் பொறுப்புகள் மற்றும் விருந்தோம்பல் ஆகியவை தொடர்பாக பல்வேறு விளக்கமான அறிவுரைகளை வழங்கியவாறு கடைசியில் இவ்வாறு வலியுறுத்திக் கூறினார்கள்:*

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளை, ‘எப்பொழுதும் புன்சிரித்துக் கொண்டே இருங்கள்’ என்பதன் படி செயல்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ் எல்லாப் பணியாளர்களையும் சிறப்பான முறையில் தம்முடைய பணிகளை நிறைவேற்றச் செய்வானாக! ஆண்டு மாநாடு எல்லா விதத்திலும் அருளுக்குரியதாக அமையட்டுமாக! குறிப்பாக, ஒவ்வோர் அஹ்மதியும் இந்த ஜல்சாவின் வெற்றிக்காக துஆக்கள் செய்து கொண்டேயிருக்க வேண்டும். அல்லாஹ் நம் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பையும் வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**